




# சுதந்திரன்

SUTANTIRAN



வ. ஆண்டு 2008 | கார்த்திகை 28 | முஹர்ரம் | செவ். (13-12-77) புத்தகம் 31 | இதழ் 54 | சதம்35


## லோகிதராசா இடமாற்றம்

### செங்கலடியில் கொந்தளிப்பு

கல்குடா பா.உ.வும் நீதி அமைச்சருமான திரு. தேவநாயகத்தின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளின் காரணமாக செங்கலடியைச் சேர்ந்த திரு. செ. லோகிதராசா என்ற இளைஞர் இடமாற்றம் செய்யப்பட்ட சம்பவத்தினால் செங்கலடியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது,

திரு, லோகிதராசா, வாழைச்சேனை காகித ஆலைத் தொழிற்சாலை ஊழியர் சென்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான திரு. சி. சம்பந்தமூர்த்திக்காக உழைத்த துடிப்புள்ள இளைஞர். செங்

—4-ம் பக்கம் பார்க்க

# "எந்தச் சட்டத்தாலும் எமது சுயநிர்ணய உரிமையை பறித்துவிட முடியாது!"

### மனித உரிமை தினக்கூட்டத்தில் கதிரவேற்பிள்ளை பா உ. விளக்கம்

"தமிழ் ஈழ மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை சட்டரீதியாக இழந்துவிடவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தின்படியும் சர்வதேச சட்டங்களின் படியும் தனது சுயநிர்ணய உரிமையை பிரயோகித்து தனது சொந்த அரசை நிறுவ தமிழ் தேசிய இனத்துக்கு அருகதை உண்டு இந்த உரிமையை எந்த சட்டத்தினாலும் தடுத்து விடமுடியாது,"

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் தினக் கூட்டத்தில் பேசிய கோப்பாய் பா. உ. திரு. சி, கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார். இக்கூட்டத்துக்கு முன்னாள் மூதவை உறுப்பினர் திரு.சு.நடராசா தலைமை தாங்கினார், திரு. கதிரவேற்பிள்ளை மேலும் கூறியதாவது:

தமிழ் ஈழத்தின் மக்கள் இன்று பன்முகப்படுத்தப்பட்ட சமுதாயமாக உள்ளார்கள். 400 வருடங்களுக்கு முன்னர் — எமது இறைமை போர்த்துக்கீசரால் யுத்தத்தின்மூலம் பறிக்கப்படுகையில் தமிழ் பேசுபவர்களில் 90 வீதம் தமிழராகவும் இந்துக்களாகவும் இருந்தனர். ஆனால் இன்று 400 வருடங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக கிறிஸ்தவ — முஸ்லிம் மதங்கள் கணிசமான பகுதியினரால் அனுசரிக்கப்படுகிறது. முஸ்லிம்கள் தமிழ்பேசும் இனத்தின் ஓர் அங்கமாக தம்மையும் இணைத்துள்ளனர். எனவே இந்த பன்முகப்படுத்தப்பட்ட சமுதாயமே தமிழ்ஈழத்தின் குடிமக்களாக மாறிவருகின்றது. ஆகவே மனித உரிமைகள் சாசனத்தின்படி தமிழ்ஈழத்தில் முஸ்லிம்களுக்கு சுயநிர்ணய உரிமை உணடு. தமிழ் ஈழம் பற்றி எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடுகையில் 'மதசார்பற்ற சமதர்ம தமிழ்ஈழக் குடியரசு' என்றே கூறினோம். தமிழ் ஈழத்தில் எந்த ஒரு மதத்தையும் அரசு விசேட கவனம் செலுத்தி வளர்க்க முயற்சிக்காது. மனித உரிமைகள் சாசனத்தில் கூறியபடி மதத்தால் எந்தவிதமான பேதமும் தமிழ்ஈழத்தில் காட்டப்படமாட்டாது. மேலும் பிரதேச பேதங்களால் ஒரு கூட்டமோ குழுவோ தாக்கப்பட தமிழ் ஈழ குடியரசில் இடம்வைக்கக்கூடாது என்பதற்காகவே 'பரவலாக்கப்பட்ட இணைப்பாட்சி முறை' தமிழ்ஈழத்தில் கைக்கொள்ளப்படவுள்ளது. எனவே தமிழ்ஈழத்தில் மனித உரிமைகள் பிரகடனத்துக்கு பூரண உத்தரவாதம் அளிக்கப்படும். இந்தச் சிந்தனையுடனேயேதமிழ் ஈழம் வளர்ந்துவருகிறது.

அடிப்படை உரிமைகள் மனிதனுக்கும் — பின்னர் மனிதனை உறுப்பினராக கொள்ளும் சமுதாயத்திற்கும்—இனத்திற்கும் இருக்கிறது. எனவே அடிப்படை உரிமை இருக்கிறது. இருக்கிற உரிமையைத்தான் அரசுக்கள் கொடுக்கவேண்டியுள்ளதே தவிர அடிப்படை உரிமைகளை புதிதாக உருவாக்குவதில்லை. எனவே அடிப்படை உரிமையைதாருங்கள் என்பதிலும் பார்க்க இருக்கிற அடிப்படை உரிமைகளை கொடுங்கள் என்பதே சிறப்பானதும் அர்த்தமுள்ளதுமான கோரிக்கை எனலாம்.

மனித உரிமை சாசனத்தின்படி ஒவ்வொரு இனத்திற்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. தமிழ் ஈழத்தை பொறுத்தமட்டில் நாம் போர்த்துகீசரிடம் 1833 எமது இறைமையை யுத்த முறையில் இழந்தோம் அதன் பிறகு போர்த்துகீசரிடமிருந்து அரசை ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் கைமாறி கொண்டனர். இறுதியில் ஆங்கிலேயர் சுயநிர்ணய உரிமை உள்ள இரு வேறு இனங்களை—ஒரே நாடாக அல்ல ஒரே நிர்வாகத்தின் கீழ் நிர்வாக வசதிக்காக ஒன்றிணைந்தனர். அதன் பிறகு 1972 வரை நாமும் சிலவிடயங்களில் சிங்கள அரசுகளுடன் ஒருமித்து இயங்கியது உண்டு. ஆனால்1972ம்ஆண்டு சிங்களவர்கள் தமக்கென ஒரு குடியரசமைப்பை எழுதத் தொடங்கியதும்—தமிழ்த்தலைவர்கள் அதில்கலந்து கொள்ளாது விலகி கொண்டனர் எனவே சிங்கள மக்கள் தங்களுக்கென தாம் உருவாக்கிய சிங்கள நாட்டின் அரசியலமைப்பை தங்கள் மேலும் தமிழர் மேலும் திணித்துள்ளனர். எனவே இரு சுயநிர்ணய உரிமை உள்ள இனங்கள் வாழும் நாட்டில் ஒரு இனம் மட்டும் அரசியலமைப்பை வகுத்து மற்றைய இனத்தின்மேலும் அதனை திணித்துள்ளது. ஆகவே தான் நாம் கூறுகிறோம் சட்டப்படி நாம் சுயநிர்ணய உரிமை உள்ளவர்கள் என்று, சட்டத்தை சட்டத்தால் மாற்ற வேண்டும் புரட்சியால் மாற்றினால் சட்டத்தொடர்பு இல்லாது போய்விடும்.புரட்சி இரண்டு வழிகளில் நிகழலாம் ஒன்று இரத்தம் சிந்தும் வழி—மற்றையது சமாதான வழி—பிரிட்டிஷ் இடம் இருந்து இலங்கை அரசு சமாதானப் புரட்சி மூலமே உருவாகியது எனவே நாம் எமது சுயநிர்ணய உரிமையை சட்டப்படி இழக்கவில்லை. ஐ. நா. மனித உரிமைகள் சாசனத்தின்படி "சுயநிர்ணய உரிமை" கோர தமிழீழ மக்களுக்கு பூரண சட்ட அதிகாரம் உண்டு" என்றார்.

### 'போர்' வெளியீடு

ஈழத்தமிழ் மாணவர் மன்றத்தின் 'போர்' நூல் வெளியீடு 13-12-77 மாலை 3-30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில், திரு. இளையதம்பி அவர்களின் தலைமையில் நடைபெறும். இதன் பிரதிகளை முறையே திருவாளர்கள் க. கனகராசா, எஸ், தியாகராசா. அ. அரசரெட்ணம், எம். புவனேஸ்வரன் ஆகியோர் வாங்குவர். நூலாசிரியர் திரு. பீதாம்பரம் விவேகானந்தராஜா.


உ

சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் பிங்கள வருடம் கார்த்திகை மாதம் 29-ம்திகதி (14-12-77) புதன்கிழமை இரவு 8.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>தியாகராஜா<br>அவர்களுக்கும்<br>(பொறியியல் இயக்குனர். லண்டன்) | எமது சிரேஷ்ட புத்திரி<br>திருநிறை செல்வி<br>ஹேமாங்கினி<br>(பி.எஸ்.சி. இரசாயனம் சிறப்பு சென்னை)<br>அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் செய்ய. பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புரிமைதழுவி அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;

திரு/திருமதி. T. அம்பலவாணர், 'இரஜபதி' இணுவில்.

திருமதி, P. குணரெட்ணம் இராசவீதி சந்தி, அச்சுவேலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன்: முத்தண்ணே நம்ம தபாலமைச்சர் இப்படிப் பண்ணிற்ருர்.

முத்து: யாரு ஷெல்டன் ஜயசிங்காவையா சொல்லுருய்.

கந்தன்; அட அவர் கிடக்கிருர். அவரைப்பற்றி நமக்கென்ன கவலே நான் சொல்லுறது நம்ம தமிழர் விடுதலே கூட்டணி அமைச்சுதே நிழலமைச்சு அதில் தபாலமைச்சராய் இருந்தவரைத்தான் சொல்லுறன்.

முத்து: யாரு நம்ம கரணம் கனகரத்தினத்தையா சொல்லுருய் இவரு அப்பிடி பல்டி அடிப்பார் என்று தெரிஞ்சுதான் பொருத்தமாக அந்தப் பதவியையே கொடுத்தாங்க போலும்.

கந்தன்! ஏன் அப்பிடிச் சொல்லுறீங்க?

முத்து. முந்தின அரசாங்கம் குத்தகையாப் பிடிச்சிருந்த குமாரசூரியரும் தபாலமைச்சர்தானே. அந்தத்தபாலமைச்சருக்கு இருந்த புத்தி இந்ததபாலமைச்சருக்கும், என்ன செய்யிறது.

கந்தன்! ஏன்! அண்ண இந்த மனுஷனுக்கு புத்தி இப்பிடிப்போச்சு.

முத்து: அவங்க புத்தியை பிழை சொல்லி ஒண்டுமில்ல ஏனென்டால் ஒரிஜினலா அவங்கபுத்தியே அதுதான். கனவில கூட எம். பி. பதவியை எதிர்பார்த்திராதவர்களை நம்மட ஆக்கள் வலியப் பிடிச்சு இழுத்து எம்.பி. ஆக்கினு அவங்க தங்கட புத்தியைக் காட்டத்தானே செய்வாங்க இயக்கத் தொண்டர்களை தேர்ந்தெடுக்காமல் இப்பிடி ஊருக்குள்ள பெரிய மனிதர் போல தோனுறதுகளுக்கு இலட்சிய புருஷர் வேஷம் கட்டினுல் இப்பிடித்தான் செய்யுங்கள்.

கந்தன்! உண்மையில ரோஷம். வெட்கம் இருந்தால் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைச்சு எடுத்த இந்த எம். பி பதவியை இந்தக் கரணம் உடனே இராஜிநாமா செய்யவேணும் இல்லேயாண்ணே.

முத்து; நீ சொல்றது அவுங்களுக்கு இருந்தாத்தானே இல்லாதவங்களிட்ட எதிர்பார்க்கிறது தப்பு.

கந்தன்! அண்ணே இந்தச் சாபக்கேடுகள் நம் இனத்தில்இல்லாமல்போக வழியே இல்லேயா.

முத்து: ஏனில்லாமல் என் புத்திக்கு எட்டினதைச் சொல்லுறன் முதலாவது நான் முந்திச் சொன்னது போல இயக்கத் தொண்டர்களே. இலட்சிய வாதிகளேத்தான் தேர்தலில நிறுத்தவேணும், அடுத்தது தமிழ் நாட்டில் முடிஞ்சவரை தி.மு.க. செய்யிறமாதிரி ஒரு வேட்பாளர் தன் தொகுதியில் போட்டியிடாமல், வேற தொகுதியில போட்டியிட வைக்கவேணும்,

கந்தன், ஏன்?


முத்து: ஏனென்டால் இப்ப நம்மட கரணம் பல்டி அடிச்சதுக்கு சொல்லித்திரியிற காரணம் என்ன? தனது தொகுதி பின்தங்கிய தொகுதி அதை முன்னேற்றுறது தான் முதல் நோக்கம் என்று தானே அதால தொகுதிமாறி தேர்தலில நிண்டால். தன்னூர், தன்ர கிராமம், தன் வீடு, தன் குடும்பம் என்ற எண்ணம் வராமல் தமிழினம் அதன் பிரதிநிதிதான் என்ற எண்ணம் வரும்.

கந்தன்: அப்படிக் கேக்கிறது நம்ம நாட்டுக்கு சரி வருமா அண்ணே!

முத்து! தமிழீழம் கேட்கிற நமக்குள்ள சரிவருமா என்ட கேள்வி எழும்பக் கூடாது சரிவரும் என்ற உறுதிதான்வேணும்கிழக்கை சேர்ந்தவங்க வடக்கிலயும், வடக்கை சேர்ந்தவங்க கிழக்கிலேயும் தேர்தலில் நின்றிருந்தால் வடக்கு கிழக்கு துவேஷத்தை யாராலும் வளர்க்கஏலாது.

கந்தன்! அது நடக்குமா?

முத்து: ஏன் நடக்காது அந்த அளவுக்கு அரசியல் நாகரீகம் நம்ம மக்களிட்ட ஏற்படாட்டிலும்அந்தமனப் பான்மையை நம்ம மக்களுக்குள்ள உருவாக்க வேண்டியது எங்கட தலைவர்மாருக்குள்ள முக்கிய கடமை அந்த நிலைமை மட்டும் உருவாகினுல் தொகுதியைக்காரணம் காட்டி இப்பிடி கரணம் போட்டு அரசாங்கக் கட்சிகளிடம் சாரணமாகிற பிறவிகளை நிட்சயமாக இல்லாமல் செய்யலாம் என்பது எனக்குள்ள நம்பிக்கை.



தமிழீழத்தின் சிறந்த தொழிற் கூடமான மில்க்வைற் சோப் தொழிலகம் தனது பொன் விழாவை அண்மையில் கொண்டாடியது இவ் விழாவின்போது மேற்படி தொழிலகத்தின் முதுகெலும்பான தொழிலாளர்கள் மத்தியில் தாமும் ஓர் தொழிலாளியாக மில்க்வைற் நிறுவன அதிபர் திரு. கனகராசா மகிழ்வுடன் அமர்ந்திருக்கும் காட்சியை இங்கு காணலாம்.
படம்: ஏ. வி. எம்.

# ஆறுதலை எதிர்பார்த்தனர் அகதிகள் அரசாங்க அதிபர் கூறியதோ....!

பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் திரு. வேரப்பிட்டியாவும், யாழ் அரசாங்க அதிபரும் கைதடி அகதிகள் முகாமைச் சந்தித்தபோது அங்கு ஒரே பரபரப்பு உண்டாகியது. புனர்வாழ்வுக்காகக் காத்துக் கிடக்கும் மக்கள் அவர்களது திடீர் விஜயத்தினுல் தமக்குப் புது வாழ்வு கிடைக்கப்போகின்றது என்ற மகிழ்ச்சியோடு திரண்டு ஓடோடி வந்தனர்.

முகாமிற்குப் பொறுப்பாயிருந்தவர்களிடம் "முகாமிலுள்ள அகதிகளின் தொகை என்ன? இலங்கையர் எத்தனே? இந்திய வம்சாவழியினர் எத்தனே? என்று யாழ் அதிபர் கேட்க, வேறுமுகாம்களிலிருந்தவர்களும் வந்திருப்பதால் சரியான தொகையை ஞாபகத்திலிருந்து சொல்ல முடியவில்லே என்று தொண்டர் ஒருவர் பதில் கொடுத்தார். அதற்கு "ஒருவரையும் இனிமேலாக முகாம்களில் எடுக்கக்கூடாது என்ற அரசாங்க அதிபரின் கூற்றுக்கு "மற்றைய முகாம்களில் இருந்தவர்களே தவிர புதிய அகதிள் அல்ல என்று சமூக சேவையாளர் கூறியதைத் தொடர்ந்து "முகாம்களை மூடுவதற்கு உத்தேசித்திருக்கிரேம். கைதடியிலும், கிளிநொச்சியிலும் மட்டுமே முகாம்கள் இருக்கும் என்று அதிபர் கூறினுர்;

அரசாங்க அதிபர் பேசிக்கொண்டிருக்கும்போதே துன்பத்திலுழலும் மக்கள் "ஐயா! இங்கு எமக்குப் போதிய உணவு இல்லே. நாளில் ஒரு நேரம் மட்டுமே எனக்குத் தேநீர் வழங்கப்பட்டது. இப்போது அதுமுதலாய் இல்லே." என்று தம் துன்பப்படலத்தை ஆரம்பிக்க, அவற்றைக் கேட்கப் பொறுக்காதவராய் இராணுவக் காவல்கொண்ட வாகனத்திலேறி மறைந்துவிட்டார்,

மக்களேப் பார்க்க வந்த தலேவர் தெருவிலே தரித்து நின்று சேமம் விசாரிக்க, பரதுகாப்பு அமைச்சின்செயலாளர் பாதுகாப்பாக வாகனத்திலேயே அமர்ந்து வாகனத்தை விட்டிறங்காதிருக்க. புளுதியை எழுப்பிவிட்டு இராணுவ வாகனம் நொடிப்பொழுதில் பறந்துசெல்ல, ஒரு புதிய ஏமாற்றத்தோடு, புளுங்கிய உள்ளங்களோடு மக்கள் முகாமுக்குள் புகுந்தனர்.

## ஈரான் தமிழ் இளேஞரின் இனப்பற்று!

ஈரானில் வாழும் தமிழ் இளேஞர்கள் அண்மைக்கால அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு உதவவென 360 டொலர் (5300ரூபா) ஐ சேர்த்து அனுப்பிவைத்துள்ளனர். யாழ் ரெட்டரிச் சங்கத்தின் பெயருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இப் பணம் மக்கள் வங்கியிலுள்ள யாழ் ரெட்டறிச் சங்க புனர்வாழ்வு நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

# வெளிவாரி நிலேயமிருக்க வெளியார் நிறுவனங்கள் பணம் சுரண்டுவதேன்?

வெளிவாரிபட்டப்படிப்புக்கு பதிவுசெய்வதற்கென வெளிவாரி முகவர்நிலேயம் இருக்கத்தக்கதாக தமிழ்ப் பத்திரிகைகளில் தாம் தான் யாழ்ப்பாண பிரதேசத்திற்கு பதிவாளர் எனவும் மட்டகளப்பு பிரதேச பதிவாளர் எனவும் சில தனியார் நிறுவனங்கள் விளம்பரம் செய்கின்றன. இதனுல் தமிழ் மாணவர்கள் இவைகள்தான் அரசின் உத்தியோகபூர்வமான நிலேயங்களௌன நம்பி அதிக பணம் செலுத்தி தமது பெயர்களே பதிவுசெய்யும் பரிதாப நிலேயை காணக்கூடியதாக உள்ளது: இச் சுரண்டல் வேலே பற்றி வெளிவாரி முகவர்நிலேயம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா? என தமிழ் மாணவ உலகு சார்பாக கேட்கவிரும்புகின்ரேம்.

## ஈழத்தமிழர் பிரச்சினேக்கு 'இதயம் பேசுகிறது' இடமளிக்கும்

—மணியன் உறுதிமொழி

தமிழகத்தின் பிரபல்யமான எழுத்தாளர் மணியம் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பொழுது ஈழத்தமிழர் பிரச்சினேக்கு 'இதயம் பேசுகிறது' என்னும் பெயரில் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வெளியிட விருக்கும் தனது புதிய வார வெளியீட்டில் இடம் அளிப்பதாக உறுதி அளித்துள்ளார்,

தமிழக ஏடுகள் ஈழத் தமிழினச் செய்திகளுக்கு போதிய முக்கியத்துவம் அளிப்பதில்லே என பலர் மணியனிடம் கேட்டதற்கு "தனது இதயம் பேசுகிறது ஏட்டில் ஈழத் தமிழர் பிரச்சினே நிச்சயம் எதிரொலிக்குமெனக் கூறினுர். மேலும் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் "இதயம் பேசுகிறது" வார வெளியீட்டில் இடமளிக்கப்படுமெனவும் கூறினுர்.

தலேசிறந்த பயணக் கட்டுரை எழுத்தாளராகிய அவர் இதற்குமுன் இலங்கையை பற்றி அவரது பயணக் கட்டுரைகளில் எழுதாது ஏன் எனக் கேட்டமைக்கு இக் குறைபாடு இனி இராதெனவும் விரைவில் இலங்கை பற்றிய பயணக் கட்டுரை அவரின் பேனு முனேயிலிருந்து பிறக்க உள்ளதெனவும் அவர் கூறினுர்.

யாழ்ப்பாணத்தில் தனது நண்பர்களேயும் எழுத்தாளர்களேயும் பத்திரிகையாளர்களேயும் சந்தித்து கலந்துரையாடிய திரு. மணியம் அவர்கள் சுதந்திரன் காரியாலத்திற்கும் விஜயம் செய்தார். அவரை வரவேற்ற சுதந்திரன் ஆசிரியர் சுதந்திரன் பிரசுரங்களே அவருக்குஅன்பளிப்பாக வழங்கினுர்.

## கிளிநொச்சி றெட்டறி கழகம் 2000 ரூபா வழங்கியது

கிளிநொச்சி றெட்டறிக் கழகம் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கென இரண்டாயிரம் ரூபாவை திரட்டி வழங்கியுள்ளனர். கிளிநொச்சிறெட்டறிச் சங்கத்தின் சமூக சேவைகளில் இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்துள்ளது.

## மாணவர்கள் தடுமாற்றம்

சிங்கள கெடுபிடிக்கு ஒரு உதாரணம்

மாத்தளே மாவட்டத்தில் க. பொ. த. (சாதாரணதர) பரீட்சை மேற்பார்வையாளராகவும் நோக்காளராகவும் தனிச் சிங்களவரே நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் பலநூறு தமிழ் முஸ்லீம் மாணவர்கள் க.பொ. த. பரீட்சைக்கு தோற்றியபோதிலும் மாத்தளே கல்வி கந்தோர் படு பாராபட்சமான முறையில் ஒரு தமிழ் முஸ்லீம் ஆசிரியரை கூட நியமிக்கவில்லே. பல நூறு தமிழ் முஸ்லிம் ஆசிரியர்கள் மேற்பார்வையாளர் நியமனத்துக்கு விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் இடமாற்றத்தால் கல்வி சீர்குலேவு

வவுனியா மாவட்டத்தில் அரசியல் இடமாற்றங்கள் இடம்பெறுவதால் கல்விச் சீர்குலேவு தலேதூக்கியுள்ளது.

வவுனியாவில் 5 ஆசிரியர்கள் ஏக காலத்தில் சிங்கள அரசால் அரசியல் இடமாற்றம் செய்யப்பட்டதால் ஒரு பாடசாலேயையே மூட வேண்டிய அளவுக்கு கல்வி நிலேமை சீர்குலேந்துள்ளதாம்!

## நெல்மணிகளால் செல்வாவின் திருவுருவம்

யாழ் ரங்கன் இசைக்குழுவின் அதிபர் கனக இசைமணி ரங்கன் அவர்களின் சிபார்சின் பேரில் யாழ் பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. ஆனந்தராஜா அவர்களின்ஆதரவுடன் அச்சுவேலியைச்சேர்ந்தபொற்கலேஞன் மகன் துரைசிங்கம் துரைரட்ணம் (ரி. ரீ. ஆர்) அவர்களால் மறைந்த தலேவர் தந்தை செல்வா அவர்களின் உருவப்படம், மூன்று இன நெல்மணிகளால் செய்யப்பட்டு 7-12-77 தொடக்கம் 7-1-78 வரை மாணவர்களின் பார்வைக்காக, அக் கல்லூரி நூல் நிலேயத்தில் வைக்கப்பட்டுள்ளது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பழிவாங்கல் உச்சக்கட்டம்!

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது, கற்குடாத் தொகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் திரு. சி. சம்பந்தமூர்த்தியின் வெற்றிக்காக வாகரையிலும், மற்றும் இடங்களிலும் கடுமையாக உழைத்த கவிஞர் வாகரை வாணனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆளுங்கட்சியினராலும் அவர்களது அடிவருடிகளாலும் தொடர்ந்து பழிவாங்கப்படுகின்றனர். விபரம் இதோ!

வாகரை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் தலைமை எழுத்தராக (Chief clerk)க் கடமையாற்றிவரும் வாணனின் மூத்த சகோதரர் திரு. ச. செபநாயகம் அவர்களும் அதே அலுவலகத்தில் எழுத்தராக (Clerk)க் கடமையாற்றும் திரு. கு. அருட்பிரகாசம் அவர்களும் பொதுமக்களின் எதிர்ப்பிற்கிடையே (வாழைச்சேனை, ஓட்டமாவடி முஸ்லீங்கள் உட்பட) எந்த வித காரணமுமின்றி, முறையே அம்பாறை, மட்டக்களப்பு, கச்சேரிகளுக்கு மார்கழிமாதம் 1ந் திகதி துவக்கம் இடம்மாற்றப்பட்டுள்ளனர். அம்பாறையில் தமிழர்களின் உயிர் உடைமைகளுக்குப் போதிய பாதுகாப்பில்லாததினால், திரு. ச. செபநாயகம் அவர்கள் தமது பதவியிலிருந்து இளைப்பாற உத்தேசித்துள்ளார். தொடர்ந்து, இன்னும் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றக்கூடிய நிலையில் இருந்தும் (அ)நீதி அமைச்சரின் பழிவாங்கல் காரணமாக இந்த முடிவுக்குத் தள்ளப்பட்டுள்ள திரு. செபநாயகத்தின் குடும்பத்தின் மீது பொதுமக்கள் பெரிதும் அனுதாபம்கொண்டுள்ளனர்.

இவர்கள் தவிர வாணனின் இன்னுமொரு சகோதரரும் கோறளை வடக்கு சடுதி மரண விசாரணை அதிகாரியுமான திரு. ச. சத்தியரெத்தினம் அவர்களும் அவரது பதவியிலிருந்து எந்த வித காரணமும் காட்டாமல் (அ)நீதி அமைச்சரால் விலக்கி வைக்கப்பட்டுள்ளார். வாகரை வாணனின் குடும்பத்தினர் இப்படித் தொடர்ந்து பழிவாங்கப் படுவதற்கு வாகரை முன்னுள் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. எஸ். எஸ். சேனாதிராசா, திரு. த. ஆனந்தராசா, திரு. அ. அருமைநாயகம் (ஐ. தே. கட்சியின் வால்கள்) ஆகியோரே முக்கிய காரணகர்த்தாக்கள் என்று பொதுமக்கள் பரவலாகப் பேசிக்கொள்கிறார்கள்.

இவர்கள் இந்த இழி செயலில் ஈடுபட்டிருப்பதற்கு இன்னுமொரு காரணமும் இருப்பதாகத் தெரிகிறது.

அதாவது விரைவில் நடைபெறவிருக்கும் வாகரை ஊராட்சி மன்றத்தலைவர் தேர்தலில் மக்களின் விருப்பத்திற்கிணங்கப் போட்டியிடவிருக்கும்' கவிஞர்—வாகரை வாணன் மீது கொண்ட தனிப்பட்ட பகை உணர்வும், கட்சிக் குரோதமுமே வாகரை ஐக்கிய தேசியக் கட்சியின் படிப்பறிவில்லாதவர்களை ஆட்டம் போட வைத்துள்ளன என்று உண்மை உணர்ந்த மக்கள் ஆத்திரப்படுகின்றனர்

# இயமன் வருகின்ருன்!

கண்ணின் மணியெனவே காத்த சிறுமகவை
மின்னும் வாளெடுத்து மிருகம் போற்கொன்று
சின்னஞ் சிறுமதியார் சிரித்து மகிழ்ந்தனரே
இன்னல் தரத்தீயில் இட்டு எரித்தனரே

பேயும் இரங்கிடுமாம் பெண்ணென் ருலுலகில்
பேயில் இழிந்தனரே பொருதி அழித்தனரோ
நாயாய் நம்குலத்து நங்கையர் கற்பழித்தார்
தாயை தமிழ்சேயை தறித்து விழுத்தினரே

பன்னிப் பன்னியவர் பணமாய் சேர்த்தவைகள்
மின்னும் பொன்தாலி மிலேச்சர் அறுத்திட்டார்
கண்ட துண்டமென கயவர் துணித்திட்டார்
உண்ட வீட்டினையே உடைத்தார் கன்னமிட்டு

கடமை புரிகின்ற காக்கி வேலிகளும்
மடமை மதியருடன் மனிதப் பயிர்மேய்ந்தார்
உடமை கொள்ளையிட உடந்தையாய் நின்ருர்
திடமே தந்திட்டார் தீயப் பெருங்கடைகள்

இம்மட்டும் போதாதோ இடிபோல் இன்ருென்று
மும்மொழித் திட்டமெனும் மூடுதிரையினுள்ளே
எம்மொழி தனையழிக்க இயமன் வருகின்ருன்
நம் மொழி நாம்காக்க நமதீழம் காண்போம்

—செல்வி இ. குணம்
இளவாலை.

# சங். சகோதரிகள் கடும் சுகவீனம்!

அகதிகள் முகாம்களில் இரவும் பகலும் மக்களுக்காக ஓய்வின்றிப் பணியாற்றிய பல சங். சகோதரிகள் கடுமையான நோய்க்கு ஆளாகியுள்ளார்கள். இவர்கள் பல மாதங்களுக்கு படுக்கையைவிட்டு எழக்கூடாது என்று டாக்டர்கள் உத்தரவிட்டுள்ளதாக தெரியவருகிறது.

கலவரத்தின்போது இவர்கள் முகாம்களில் செய்த சேவையை 'கதலிக் அக்ஷன்' என்று சில குறுகிய புத்திபடைத்தவர்கள் களங்கம் கற்பித்ததும் பலர் அறிந்த விடயம் தங்களைப் பொறுத்தவரையில் தமது சேவையை பிறர்சினேகத்திலும், மனிதாபிமானத்தின் அடிப்படையிலுமே சேவையாற்றுவதாக இவர்கள் இன்றும் கூறுகின்றனர்.

கொழும்பு, வீச்சுக் கல்முனையை சேர்ந்த பிரான்சிஸ்கன் சபையினர், கொழும்பு, மாத்தறை, இரத்தினபுரவைச்சேர்ந்த பரித்தியாக சபையினர் யாழ். திருச்சிலுவை சபையினர். வடமாகாண திருக்குடும்பக் கன்னியர் சபையினரும் சேவையிலீடுபட்டோரில் அடங்குவர்.

# மாணவிகள் செலவில் அதிபரின் பிறந்தநாள்!

மானிப்பாய் தேர்தல் தொகுதியிலுள்ள முஸ்லீம் மகளிர் கல்லூரியொன்றில் மாணவிகளின் செலவில் அதிபர் பிறந்தநாள் விழாக் கொண்டாடினாராம். இச் சம்பவம் தேசிய பேரவையில் எதிரொலிக்கும் அளவுக்கு சென்றுள்ளது பற்றிய உண்மை விரைவில் அம்பலமாகுமெனத் தெரிகிறது: கடந்த அரசின் காலத்திலும் பதியுதீனின் அருளால் பலதடவை இப்பாடசாலைக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளதாம். அது எவ்விதம் செலவழிக்கப்பட்டதென்பதும் மர்மமாக இருந்து வருகிறதாம்.

# கலைஞர் மு. க. வை கௌரவிக்க பிரேரணை

மார்கழி மாதம் 16, 17, 18ம் திகதிகளில் சென்னையில் நடைபெற இருக்கும் உலகத் தமிழர் பண்பாட்டியக்க மாநாட்டில் "உலகத்தமிழர் தலைவர்" என்ற பட்டம் கலைஞர் மு. கருணாநிதிக்கு சூட்டி அவரை கௌரவிக்க வேண்டும் என்ற பிரேரணையை உலகத்தமிழர் பண்பாட்டியக்க இலங்கைக் கிளையின் சார்பில் அதன் யாழ் மாவட்ட அமைப்பாளர் சிவஜோதிலிங்கம் அவர்கள் கொண்டு வர இருக்கின்ருர். இதற்கான முன்னறிவித்தலை அவர் உலகத்தமிழர் பண்பாட்டியக்க செயலாளர் இரா— கனகரத்தினத்துக்கு அறிவித்ததுடன், இப்பிரேரணைக்கு தங்களது தார்மீக ஆதரவைத் தருமாறு உலகத்திலுள்ள அத்தனை பண்பாட்டியக்க கிளைகளுக்கும் அவர் கடித மூலம் தெரிவித்துள்ளார். அதோடு இரண்டாவது பண்பாட்டியக்கமாநாடு இலங்கையில் அதுவும் திருக்கோணமலையில் நடைபெற வேண்டும் என்ற பிரேரணையையும் கொண்டுவர இருக்கின்ருர். இப் பிரேரணைகள் நிறைவேற்றப்படுமிடத்து "உலகத்தமிழர் தலைவன்" என்ற பட்டம் கலைஞருக்கு சூட்டப்படலாம்

# சிறந்த பயிற்சி நெறிகள் தமிழில் இல்லை

விலைமதிப்பாளர் பயிற்சி நெறி, மருத்துவ தொழில் நுட்பபயிற்சி நெறி, எக்ஸ் கதிராளார் பயிற்சி நெறி போன்ற தொழில் முக்கியத்துவம் வாய்ந்த பல பயிற்சி நெறிகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் நடாத்தப்படுகின்றன.

தமிழ் இளைய சமுதாயமே! உன்நிலையை எண்ணிப்பார்! சிங்களவர் தம் மொழியில் சிறப்பாக பயிற்சி நெறியை பின்பற்றும் வேளையிலே நீ ஒரு அந்நிய மொழியாம் ஆங்கிலத்தில் அவைகளை பின்பற்றி சிந்தனையை வளர்த்து கொள்ள முடியாது சிக்கித்திணறுவதை. ஏன் இந்தப் பேதம்? அவன் ஆளும் இனம் நீ ஆளப்படும் இனம் மும்மொழிகளுக்கு சமத்துவமாம் உன் மொழிக்கு மட்டும், தொழில்நுட்பக்கல்லூரிகள்—மருத்துவக் கல்லூரிகளில் இடம் இல்லையாம். நன்ருக சிந்தி நீ வாழ நீ ஆளும் ஒரு நாடு வேண்டும் மென நீ தெளிந்து கொள் வாய்.

# இரசிகமணியின் மறைவு இலக்கிய உலகின் பேரிழப்பு

## சாலை இளந்திரையன் கண்ணீர்;

ஈழத் தமிழ் இலக்கிய விமரிசனப் பணியின் ஒரு பெருஞ்சிகரமாக விளங்கிய இரசிகமணியின் மறைவுச் செய்தி கேட்டு, தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் இரசிகமணியின் நெடுநாள் நண்பருமாகிய சாலை இளந்திரையன் விடுத்துள்ள கண்ணீர்ச் செய்தி வருமாறு:

"என் இனிய நண்பர் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள் (16-11-77)ல் இயற்கை எய்திய செய்தி கேட்டுக் கலங்கினேன், ஆயினும் யாரோ வேடிக்கை மனிதர்களைப் போல், பத்தோடு பதினொன்று என்று இல்லாமல் தனித்த புகழ்நாட்டி மறைந்த அவருடைய சாதனை வாழ்வு எனக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கிறது...

"தமிழ் இலக்கிய விமர்சனத் துறையில் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்தவர் என்று நண்பர் இரசிகமணியை இளைஞர்கள் குறிப்பிடுவது உண்டு. ஆனால் பழமை, புதுமை என்ற பாகுபாட்டுப் பிளவினால் புதியவர்களிடம் அடியோடு வற்றி வறண்டு கொண்டிருந்த இலக்கியச் சுவைப்பு ஆர்வத்துக்குப்புத்துயிர் கூட்டியவர் என்பதே கனக செந்திநாதரின் தனித்த பெருமை. தமிழ் இலக்கியத்தைமதிப்பிட்டு அறிமுகம் செய்யும் தொண்டிலேயே அவர் தம்முடைய முழுவாழ்வையும் செலவழித்திருக்காவிட்டால், வெளியே உள்ளவர்கள் மட்டுமல்ல,—ஈழத்துப் புதிய தலைமுறையினர்களும் தங்கள் இலக்கியப் பாரம்பரியத்தை மறந்து இழந்திருப்பார்கள்!

"தனிப்பட்ட முறையில் இரசிகமணியின் இறப்பு எனக்குப் பெரிய இழப்பாக எழுந்து என் நெஞ்சை அடைக்கிறது; "ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றி எந்தத் தகவல் வேண்டும் என்ருலும் எந்தப் புத்தகம் வேண்டும் என்ருலும் இனி மேல் யாரிடம் கேட்பேன்? யார் அவ்வளவு ஆர்வத்தோடும் சுறுசுறுப்போடும் தேடி எடுத்துஎனக்கு அனுப்புவார்கள்?" இப்படி நினைக்கின்ற போது. ஈழத் தமிழ் இலக்கியத்தின்பால் தனித்த காதல் கொண்ட என் நெஞ்சம் சோர்ந்துசாம்பிப் போகிறது. என்ருலும், "ஒன்று பழுத்தால் இரண்டு தளிர்க்கும் உறுதியைஎண்ணுமல்,— நான், ஒகோ நித்தம் அநித்தியம் என்றே ஓலம் இடுவேனே?" என்றும் உறுதி நெறியை எண்ணி ஓரளவு ஆறுதல் அடைகிறேன்; இரசிகமணியின் பரம்பரையினராகச் சிலரேனும் உருவாவார்கள் என்றுநம்பி எனக்கு நானே ஆறுதல் சொல்லிக் கொள்ளுகிறேன்.

"அவரைப் பிரிந்து வாடும் எங்கள் இனிய உறவினர்களுக்கும் 'ஈழத்து இலக்கிய உலகுக்கும், வழிகின்ற கண்ணீரோடு என் இரங்கலைத் தெரிவிக்கிறேன்.

# கலாச்சாரப்பகுதியில் தமிழ் புறக்கணிப்பு

கலை, கல்வி பண்பாட்டுக் கழகத்தை பதிவு செய்வதற்காக கொழும்பில் கலாச்சாரப் பிரிவினரிடம் விண்ணப்பம் கையளிக்கப்பட்ட போது அவ்விண்ணப்பம் தனித்தமிழில் இருந்ததையொட்டி அது நிராகரிக்கப்பட்டதாம். சிங்களத்திலோ அல்லது ஆங்கிலத்திலேயோ எழுதப்படல் வேண்டுமென்று அங்குகூறப்பட்டதாம் "தன்னலம் கருதாத இவ்வியக்கத்தின் ஆக்க வேலைகளுக்கே இத்தகைய முட்டுக்கட்டையென்ருல் இக்கழகத்தின் கலை வளர்வதற்கு தமிழனின் தனித்துவம் காப்பாற்றப்பட வேண்டியது தலையாய கடனாகும்."

[illegible] நடைபெற்ற கலை கல்வி பண்பாட்டுக்கழகத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் மேற்கண்டதகவலை இதன் பொதுச் செயலாளர் ஓவியர் பெனடிக்ற் அவர்கள் வெளியிட்டார்.

கலை கல்வி பண்பாட்டுக் கழக கட்டிட நிதிக்காக ஓவியம் வரைந்து நிதிதிரட்டும்பொருட்டு ஓவியர் பெனடிக்ற் அவர்கள் கொள்ளவிருக்கும் வெளிநாட்டுப் பயணத்தின் தூதுக்குழுவில் ஓவியர் உட்பட திருவாளர்கள் செ. கோடீஸ்வரன் சட்டத்தரணி, த. தம்பித்துரை ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஞானப்பிரகாசம் ஞானம்ஸ்டூடியோ திரு. இ. வைத்தியலிங்கம் இளைப்பாறிய பொறியியலாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்த வாரம் இவர் கருத்து

# பிரிவினைச் சட்டம் கொண்டுவரப்பட்டால் ..?

இலங்கையில் பிரிவினைச்சட்டம் கொண்டு வரப்பட்டால், இந்தியாவில் பிரிவினைத்தடைச் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது தி.மு.க. திராவிட நாட்டு கோரிக்கையை கைவிட்டது போல் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் ஈழக்கோரிக்கையை கைவிட வேண்டுமா என நாம் கேட்டதற்கு இருவர் அளித்த பதில்களை இங்கு தொகுத்து தருகிறோம்.

## "தனிநாடு விரைந்துவரும்"

—மு. ஆலாலசுந்தரம்

"தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டால் தமிழ் ஈழம் விரைந்து வரும். ஏனெனில் இச்சட்டத்தால் அரசியற்கொந்தளிப்புஎழும் அந்த அரசியற் கொந்தளிப்பின் இறுதி விடையாக தமிழ் ஈழம் அமையும் என்பது உறுதி.



இந்தியாவில் பல இனங்கள் வாழ்ந்து கொண்டிருந்தமை திமுக திராவிட நாடு கோரிக்கையை கை விட்டதின் பிரதான காரணிகளில் ஒன்று. ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் இருஇனங்களே உண்டு. அதுவும் ஈழத்தின் அண்மைக்கால வரலாறுகளை நன்கு அறிந்தவர்கள்—தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ்ஈழத்தின் சாத்தியத்தையும் அதனுடைய பூரண உறுதிப்பாட்டையும் நன்கு அறிந்து கொண்ட — ஒருவராவது தமிழ் ஈழத்தை கைவிடச் சொல்லமாட்டார்கள்.

எமது இயக்கத்திற்கு தடைச் சட்டங்கள் புதியன வல்ல. இயக்க வரலாற்றை திருப்பிப் பார்த்தால் சட்டங்களை மீறிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு எனவே தடைச் சட்டம் வந்தால் வரட்டும். அதனைமீறி தமிழ் ஈழம் அமைப்பதுதான் எமது கடமை!

தந்தைசெல்வா தமிழின உணர்ச்சியை தூண்டி தமிழனைத் தமிழனாக இங்கு வாழவைத்தார். நாம் தமிழன் ஆள அவன் மண்ணை மீட்டுக்கொடுக்கவேண்டும். எனவே எந்தத் தடைச் சட்டம் வந்தாலும் தமிழ் ஈழக் கோரிக்கை கைவிடப்படக்கூடாது. சிங்கள அரசு ஏதாயினும் தமிழர்க்கு கொலைகை செய்தால் செய்யட்டும். நாம் நமது இலட்சியத்தில் முன்னேறுவோம்"

"பிரிவினைத் தடைச் சட்டத்தை ஆதரிக்கின்ற உறுப்பினர்கள் யாராவது எம்மிடையே இருப்பார்கள் என்றால் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே எமது இலட்சியத்தில் பற்றும், நம்பிக்கையும் இல்லாதவர்கள் என்றே கருதப்படவேண்டும்".

●

## "தீவிரமாகப் போராடவேண்டும்"

—அருட்திரு. சிங்கராயர் அடிகள்

பிரிவினைக் கோரிக்கை என்பது வயோதிபர்கள் பிரச்சினையல்ல வாழவேண்டிய இளம் சமுதாயத்தின் பிரச்சினை.

தி.மு.க, திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டதை இங்கு யாரும் காரணம் காட்டமுடியாது ஏனெனில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை அவர்களுடையதைப் போன்றதல்ல மொழியுரிமை மறுப்பு குடியேற்றம் போன்றவை இங்கு நடைபெறுவதுபோல் அங்கு நடைபெறவில்லை. அடிப்படை மனித உரிமைகளே மறுக்கப்பட்டு அனுபவத்தின் அடிப்படையில் எழுந்த கோரிக்கையே; தமிழ் ஈழம்! அதனால் பிரிவினைக்கோரிக்கையை கைவிட வேண்டியதில்லை இன்னும் எமது போராட்டங்களை தீவிரப்படுத்தவேண்டும்.

ஜே. ஆர். அரசு பிரிவினைத் தடைச் சட்டத்தை அமுல் நடத்துமுன்னர் பிரிவினை கோரும் அளவுக்கு என்ன நடந்தது என்ற அடிப்படைக் காரணத்தைமுதல் ஆராய்ந்து கண்டுபிடித்து பரிகாரம் தேட முன்வரவேண்டும். அப்படியும் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தமுடியாத நிலையில் பிரிவினைமீது தமிழ் மக்கள் வைத்திருக்கும் ஆதரவை அறியும் பொருட்டு ஒரு பொதுவாக்கெடுப்பை நடத்தி அதன் பேரிலேயே பிரிவினைத் தடைச் சட்டத்தை அமுல் நடத்த முன்வரவேண்டும்!

பிரிவினைத் தடைச்சட்டத்தின் காரணத்தால் தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதானால் அதையும் தமிழ் தலைவர்கள் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்ற முன்வரவேண்டும். பொதுமக்களிடம் ஒன்று கூறிவிட்டு தம்மிடையே ஒரு கருத்தை வைத்திருக்கக் கூடாது. பாராளுமன்றக்குழு கடந்தகாலங்களில் போலல்லாது மத்திய குழுவின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியதாக இருக்க வேண்டும்.

இது விடயத்தில் பொதுமக்களின் தீர்மானத்துக்கு மாறாக நடப்பார்களாயின் — தலைவர்கள் திட்டமெதுவுமின்றி போராட்டம் என்று பேசிக் கொண்டே காலத்தை கடத்துகின்றனர் என்று ஒரு சிலர் கூறும் கூற்று உண்மையாகுவதுடன் குறிப்பாக இளைஞர்களின் வெறுப்புக்கும் ஆளாக நேரிடும்.

தமிழர்கள் சரித்திரத்தை மாற்றவல்ல தமது பழைய சரித்திரத்தைப் புதுப்பிக்க நிற்கின்றார்கள் என்பதை மனதில் கொண்டு பிரிவினைத்தடைச் சட்டம் வந்தாலும் அதை மீறி தீவிரமாகப் போராட தயாராக வேண்டும்.

# நீதி அமைச்சர் வாக்கு
# கடலில் கரைத்த புளியா?

நீதி அமைச்சர்தேவநாயகத்தின் உசார்ப்பேச்சுக்கு உலைவைத்தாகி விட்டது போலும். தன் நிலையறிந்து கொடுக்கக்கூடாதவாக்கைக் கொடுத்து விட்டு தமிழ் மக்கள் முன்னால் நாக்கைக் கடித்துக் கொண்டு நிற்க வேண்டிய பரிதாப நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

முதலில் கதிர்காமம் இராமக்கிருஷ்ணமடத்தை திரும்பவும் மிஷனிடம் ஒப்படைப்போம் என்றார், பின்னர் அதற்கான சட்டங்கள் ஆராயப்படுகின்றன என்றார் அவருடைய இந்த இழுவல் பேச்சுகளுக்கு 8-12-77 தேசியப் பேரவையில் உள்ளூராட்சி அமைச்சர் முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

நிதியமைச்சு மீதான ஒதுக்கீடு பற்றிய குழுநிலை விவாதத்தில் நல்லூர் பா. உ. மு, சிவசிதம்பரம் அவர்கள் கதிர்காமத்தில் உள்ள இராமக்கிருஷ்ணமடத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு அமைச்சர் பிரேமதாசா பதிலளித்துப்பேசுகையில் "இந்த விவகாரம் வெகு தூரத்துக்கு வந்து விட்டது, கட்டிடத்துக்கு நஷ்டஈடும் வழங்கப்பட்டு காணியும் கொடுக்கப்பட்டு விட்டது என்று கூறியுள்ளார். இதன் பொருள் இனிமேல் அந்த விவகாரம் பற்றிப் பேசுவதில் பயனில்லை என்பதாகிறது.

தமிழ் அமைச்சர் தேவநாயகம் வாக்குக்கொடுக்கும் போது தன்னால் செய்யக் கூடியது எது என்பதை உணர்ந்து கொடுக்க வேண்டாமா? முடியாத காரியத்துக்கு வாக்குக் கொடுத்து இப்படியான நிலைமைக்கு ஆளாக வேண்டுமா? நீதி அமைச்சரின் வாக்கு கடலில் கரைந்த புளியாகிவிட்டதே!

---

லோகிதராசா—

—1-ம் பக்கத் தொடர்

கலடியில் அனைவராலும் பாராட்டப்பட்டுவருபவர்,

இந்த இளைஞர் செங்கலடி பழைய சிராம அதிகாரியின் மகனுவர். இவருக்கு செங்கலடியில் பெரும் மதிப்பும் செல்வாக்குமுண்டு; இவர் இப்பொழுது திடீரென எம்பிலிப்பிட்டியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

இந்த இளைஞர் அநீதியான முறையில் அரசியல் பழிவாங்கல் காரணமாக இடமாற்றம் செய்யப்பட்ட சம்பவம், செங்கலடியிலுள்ள ஐ, தே. கட்சி வட்டாரத்திலேயே பிளவையும் மோதலையும் தோற்றுவித் திருக்கிறது. லோகிதராசாவின் இடமாற்றம் அநீதியானது என்று ஐ. தே. ஆதரவாளர்களே அபிப்பிராயப்படுகிறார்களாம்.

லோகிதராசாவின் மைத்துனர் பொ. குணபாலசிங்கமும் முன்னர் நீதிமந்திரியின் பிரத்தியேக செயலாளராக இருந்து, பின்னர் கூட்டணி ஆதரவாளர் என்று காரணம் காட்டி வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டவர் என்று அறியப்படுகிறது.

---

## 6-12-77 சுதந்திரனுக்கு கிராக்கி

6-12-77 செவ்வாய் சுதந்திரன் பத்திரிகைக்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டிருப்பதன் காரணத்தால் எமது காரியாலயத்துக்கு அந்தப் பத்திரிகையைக்கேட்டு வாசகர்கள் வந்துகொண்டே இருக்கின்றனர் இந்தச் சம்பவத்துக்கு காரணம் தினசதியில் பித்தனின் மண்டபத்தில் வந்த பிதற்றல் ஒன்றே காரணமாம்.

'பல்டி' வீரர் கனகரத்தினத்துக்கு பக்கப்பாட்டுப் பாடியிருக்கிறார் இன்னும் ஒரு 'பல்டி' வீரர். அதுமட்டுமல்லாது சுதந்திரன் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒரு குழு இயங்குவதாக வேறு உளறிக் கொட்டியிருக்கிறது. விரைவில்சுதந்திரனில் இதற்கான பதிலை எதிர்பார்க்கவும்.

---

## பௌத்தருக்கு 'போயா' முழு நாள் விடுமுறை, இந்துகளுக்கு இரண்டுமணியும் இல்லையா?

பௌத்தர்களுக்கு போயா தினத்தில் முழுநாள் விடுமுறை வழங்கும் அரசு— இந்துக்களுக்கு இரண்டு மணி நேரமாவது சமய அனுஷ்டான விடுமுறை ஏன் வழங்கக்கூடாது?

இந்துக்களுக்கு இரண்டு மணிநேரம் விடுமுறை வழங்கும்படி அரசைக் கோரும் தனிநபர் பிரேரணை ஒன்றுக்கு ஊர்காவற்றுறை. பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

---

## சிங்களமும் முப்படைத் தமிழரும்!

முப்படையினர் அரச ஊழியர்களாக மாற்றப்பட்டது 1972ம் ஆண்டின் அரசியலமைப்பின்படியே! எனவே சிங்களம் மட்டும் சட்டத்திலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் இக் கோரிக்கை முப்படையிலுமுள்ள தமிழ் ஊழியர்களிடை வலுப்பெற்றுவருகிறது.

தொழில் நுட்ப சிறப்பு பயிற்சி பெற்றவர்களுக்கு சிங்கள சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுவது போல் இம் முப்படை ஊழியர்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்படவேண்டுமென சிங்களம் தெரியாத காரணத்தால் யாருமே துன்பப் படுவதை அனுமதிக்கமாட்டேன் என வார்த்தை ஜாலம் செய்யும் பிரதமரை தமிழ் மக்கள் கேட்கின்றனர்.

---

## வெள்ளி விழாப் பத்திரிகையாளர் கோபாலரத்தினம்

ஈழநாடு பதில் ஆசிரியர் திரு.கோபாலரத்தினம்அவர்கள் பத்திரிகைத்துறையில் பிரவேசித்த வெள்ளிவிழாவினை அண்மையில் கொண்டாடி உள்ளார். வீரகேசரி மூலம் பத்திரிகைத்துறையில் பிரவேசித்த திரு. கோபாலரத்தினம் சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும் திகழ்கின்றார். இன்தமிழ் இலக்கியச்சோலையில் நற்றமிழ் படைப்புக்கள் இதழ்விரித்து மலர்ந்திடபசலைகளாக மாறுபவர்கள் எழுத்தாளர்கள். ஒரு தமிழ் எழுத்தாளர்-அதுவும் பத்திரிகை துறையில்— வெள்ளிவிழாக் கண்டமைக்கு திரு. கோபாலரெத்தினத்துக்கு வாழ்த்துக்கள்.

---

## பாட்டனை தேடுங்கள்

குடியகல்வு குடிவரவு திணைக்களத்தில் கடவுச்சீட்டு (பாஸ் போட்) பெறுவதற்கு தமிழனாகவோ அல்லது முஸ்லீமாக இருந்தால் பேரனின் பிறந்த இடம் கேட்கிறார்கள்.

என்ன அக்கிரமம் இனி வெளிநாடு போவதானால் பேரனைத் தேட வேண்டிய பரிதாப நிலையில் நம்மவர்கள் இதுதான் ஜே. ஆரின் சமத்துவம்!

"மில்க்வைற் செய்தி இதழ்—24"

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் மெடிக்கேட்டட்சோப் அல்லது 2 பா சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப் பகுதி:
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி செவ்வாய்க் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org